உ
சிவமயம்



சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும்
Kenton, Londonஐ வதிவிடமாகவும் கொண்ட

புன்னகைத் தாய்

# அமரர் திருமதி. நந்தினி ஸ்கந்தராஜா

அவர்கள்

இறைபதம் எய்தியமை குறித்த

# நினைவு மலர்

21.07.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



அன்னை மடியில்
24 * 05 * 1956

ஆண்டவன் அடியில்
20 * 06 * 2017

# அமரர் திருமதி நந்தினி ஸ்கந்தராஜா

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த ஆனித்திங்கள்
பூண்ட அபரபக்க துவாதசியில் - மாண்பு
ஸ்கந்தராஜா பத்தினி நந்தினி அம்மையார்
ஸ்கந்தனவன் தாளடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பஞ்சபுராணம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## முதலாம் திருமுறை

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையயமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

-சம்பந்தர்

## இரண்டாம் திருமுறை

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பு இரண்டு முடனே
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த அதனால்
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

-சம்பந்தர்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே

-சம்பந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் திருமுறை

காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

-சம்பந்தர்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் நல்ல.ஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

-சம்பந்தர்

## நான்காம் திருமுறை

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டி யொர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

-திருநாவுக்கரசர்

கூற்றா யினவா றுவிலக் ககிலீர்
கொடுமை பலசெய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே யிரவும் பகலும்
பிரியா துவணங்குவ னெப்பொழுதும்
தோற்றா தென்வயிற் றினகம் படியே
குடரோ டுதுடக் கிமுடக் கியிட
ஆற்றே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறையம் மானே

-திருநாவுக்கரசர்

சலம்பூ வொடு தூபம றந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந் தறியேன்
நலந்தீங் கிலு முன்னை மறந் தறியேன்
உன்னாம மென் னாவின் மறந் தறியேன்
உலந்தார் தலையில் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறு சூலை தவிர்த் தருள்வாய்
அலந்தே னடி யே னடிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே

-திருநாவுக்கரசர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் திருமுறை

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

-திருநாவுக்கரசர்

## ஆறாம் திருமுறை

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடிஇணையே குறுகி னோமே

## ஏழாம் திருமுறை

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப் பாதமே மனம் பாலித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்னை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ் சீர்க்கரை யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்றவா வுனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

-சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே

-சுந்தரமூர்த்தி சுவாமிகள்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திரு கேதீச்சரத்தானே

-சுந்தரமூர்த்தி சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எட்டாம் திருமுறை

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்துஉன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றிசயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டுகொள்ளே

-மாணிக்கவாசகர்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவும்
பேசுவதுந் திருவாயான் மறை போலுங்காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழேலோ

-மாணிக்கவாசகர்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னைஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ இதற்கு நாயகமே

-மாணிக்கவாசகர்

### திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்

-மாணிக்கவாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அச்சோப்பதிகம் - அனுபவவழி அறியாமை

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே
-மாணிக்க வாசகர்

திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைப்பேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே
-மாணிக்க வாசகர்

## ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## பத்தாம் திருமுறை

*திருப்பல்லாண்டு*

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே
-சேந்தனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற வுழறி உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பு மறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே. -திருமூலர்

## பதினோராம் திருமுறை

### திரு இரட்டை

ஈசன் அவன்அல்லா(து) இல்லை யெனநினைந்து
கூசி மனத்தகத்துக் கொண்டிருந்தது - பேசி
மறவாது வாழ்வாரை மண்ணுலகத்(து) என்றும்
பிறவாமைக் காக்கும் பிரான்

-காரைக்கால் அம்மையார்

## பன்னிரண்டாம் திருமுறை

### திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

-சேக்கிழார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

## திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா

பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றி வேலாயுத பெருமாளே.

-வாரியார் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத்தல நிறைகனி அப்பாமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிரமணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மனமருள் பெருமாளே

-அருணகிரிநாதர்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமைந்த பெருமாளே

-அருணகிரிநாதர்

## விநாயகர் துதி

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெல்லாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதல் உடையதோர் களிற்றின் மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

## முருகன்

வேல் முருகா வேல் முருகா
வேல் முருகா வடிவேல் அழகா
கந்தா கடம்பா வேல்முருகா
கதிர்காம வேலா வேல்முருகா
சூர சம்காரா வேல்முருகா
சுப்பிரமணியனே வேல்முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி

புத்தகத்துள்ளுறை மாதே!
பூவில் அமர்ந்துறை வாழ்வே!
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்!
வேதப் பொருளுக்கிறைவி!
முத்தின் குடையுடையாளே!
மூவுலகுந்தொழும் தேவி!
செப்புக்கவித் தனமுலையாய்!
செவ்வரி ஓடிய கண்ணாய்!
முத்து நிறந்த வெண் பல்லாய்!
முருக்கம்பூ மேனி நிறத்தாள!
தக்கோலந் தின்ற துவர் வாயாய்!
சரசுவதி என்னுந் திருவே!
எக்காலுமுன்னைத் தொழுவோம்!
எழுத்தறிபுத்தி பண்ணுவிப்பாய்!

ஆக்கா எம்பெருமாட்டி!
அழகிய பூ அனை மீதாய்!
நோக்கா என்மிடி தீர நொடிக்கும்
பிராமணத்தி நோக்காயே!
சாலி நெல்லரி கொண்டு
சரசுவதி பூஜை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பிப்
பராவித் தொழுவோம் நங்காய்!
நங்காய்! நங்காய்! நமோஸ்துதே
கல்விக் கரசே! நமோஸ்துதே
கணக்கறிதேவி! நாமோஸ்துதே
சூட்சும ரூபி! நமோஸ்துதே!

## கூட்டு வழிபாட்டுப் பாமாலை

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே
ஏதா யினும்வழிநீ சொல்லாய் உனதுயிரே
வேதாவின் தாயே மிகப்பணிந்து வாழ்வோமே. ஓம் சக்தி ஓம்...

வாணி கலைத்தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுகத்தைப் போல அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாம் காட்டுவதாய்
மாணுயர்ந்து நிற்பாள் மலரடியே சூழ்வோமே. ஓம் சக்தி ஓம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னரசி நாரணனார் தேவி புகழரசி
மின்னுநவ ரத்தினம்போல் மேனி யழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே. ஓம் சக்தி ஓம்...

மலையிலே தான்பிறந்தாள் சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே ஊதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையில் உயர்ந்திடுவாள் நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே. ஓம் சக்தி ஓம்...

## மங்கள ஆரத்தி

ஜெய ஜெய ஜெய சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெய வென தினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத்தா – ஓம் ஸ்ரீ (ஜெய)
திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவை எல்லாம் மறைய – அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பி லெமை – ஓம் ஸ்ரீ (ஜெய)
இரண்டுகள் போக மூன்றுக ளகல
ஈஸ்வரி பல மருள்வாய் - அம்மம்மா
கரங் குவித்தோமினி காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் – ஓம் ஸ்ரீ (ஜெய)
காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன் பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காஷி
தேவியுடன் அடைக்கலம் நாம் – ஓம் ஸ்ரீ (ஜெய)
நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து – அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஹாரத்தி செய்தோம்
ஞாலத்துக் கமைதியைத் தா – ஓம் ஸ்ரீ (ஜெய)

## சரஸ்வதி பாடல்

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் உன்னம்மை – தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகலகலாவல்லி மாலை

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக மேழுமளித்து
உண்டானுறங்க ஒளித்தான் பித்தாக
உண்டாக்கும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகலகலா வல்லியே

நாடும் பொருட் சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்கையாசனத்துள்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகலகலா வல்லியே

அளிக்கும் செந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
உளங்கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகலகலா வல்லியே

தூக்கும் பனுவற் துறை தோய்ந்த
கல்வியும் சொற் சுவை தோய்
வாக்கும் பெருகப் பணிந்தருள்
வாய் வடநூற்கடலும்
தேக்கும் செந்தமிழ் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலா வல்லியே

பஞ்சப் பித்தரு செய்ய பொற்
பாத பங்கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந்தாட் கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன் செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருத்தாய்
சகலகலா வல்லியே

பண்ணும் பரதமும் கல்வியுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயயெழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமென்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகலகலா வல்லியே

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகலகலா வல்லியே

சொல்விற் பணமு மவதானமும்
கவி சொல்ல வல்ல
நல்வித்தையும் தந்தடிமை கொள்
வாய் நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெரும் செல்வப் பேறே
சகலகலா வல்லியே

சொற்கும் பொருட்டு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்கும் சரத்தின் பிடியோடு
அரசன்ன நாணநடை
கற்கும் பாதாம் புயத் தாயே
சகலகலா வல்லியே

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேம்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பலகோடி
உண்டெனும் விளிம்பிலுன் போற்றி
கண் கண்ட தெய்முளதோ
சகலகலா வல்லியே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லட்சுமி

ஆதிலட்சுமி தேவிக்கு அழகாய் விளக்கேற்றி
பஞ்சுத் திரி போட்டு பசும் நெய் தனை ஊற்றி
குங்குமத்தில் பொட்டிட்டு கோல மஞ்சள் தானும் இட்டு
பூமாலை சூட்டி வைத்து பூசிப்போம் உன்னை - திருமகளே
திருவிளக்கை ஏற்றி வைத்தோம் திருமகளே வருக
குலம் விளங்க எங்கள் வீட்டில் கொலுவிருக்க வருக
அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக
வாசலிலே மாக்கோலம், வீட்டினிலே லட்சுமீகரம்
நெற்றியிலே ஸ்ரீசூர்ணம், நெஞ்சினிலே லட்சுமீகரம்
அம்மா நீ ஆதரித்தால் அகிலமெல்லாம் இன்ப மயம்
அஷ்டமா சித்தியுடன் லோகமெல்லாம் சேம மயம்
அலைமகளே வருக ஐஸ்வர்யம் தருக
மாவிலையும் தோரணமும் மங்கலத்தின் அடையாளம்
ஊதுவத்தி எரிவதனால் உள்ளத்திலும் ஒரு வாசம்
அம்மா நீ அருள் புரிந்தால் அகிலமெல்லாம் அலங்காரம்
அன்றாடம் பாடிடுவோம் அஷ்டலட்சுமி திருநாமம்!

## அம்மன் - துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபினி மதியணி சூலினி
மன்மத பாணியலே
சங்கடம் நீக்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்டநல்
கற்பக காமினியே
ஜெய ஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்
மானுறு விழியாள் மாதவ மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி
சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே
எங்குலந் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்தநல் துர்க்கையளே
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனதன தநதன தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கண கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே
கெஞ்சிடும் குமரனைக் குணமிகு வேளனைக்
கொடுத்தநல் குமரியளே
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

எண்ணிய படிநீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி யதனால் கருனையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி

இடர்தரும் தொல்லை இனிமேல் இல்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர்தரும் அமுதே சுருதிகள் கூறிச்
சுகமது தந்திடுவாய்
படர்தரு இருளில் பரிதியாய் வந்து
பழவினை ஓட்டிடுவாய்
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி
ஜெயஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய துர்க்கா சிறீபரமேஸ்வரி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெயஜெய ஸ்ரீ தேவி
ஜெயஜெய சங்கரி கௌரிக் கிருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றை வேந்தன்

கொன்றை வேந்தன் செல்வன் அடியினை
என்றும் எத்தி தொழுவோம் யாமே

01. அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்
02. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
03. இல் அறம் அல்லது நல் அறம் அன்று
04. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்
05. உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு
06. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
07. எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்
08. ஏவா மக்கள் மூவா மருந்து
09. ஐயம் புகினும் செய்வன செய்
10. ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு
11. ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்
12. ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு
13. அ∴கமும் காசும் சிக்கெனத் தேடு
14. கற்பு எனப்படுவது சொல்திறம்பாமை
15. காவல் தானே பாவையர்க்கு அழகு
16. கிட்டாதாயின் வெட்டென மற
17. கீழோர் ஆயினும் தாழ உரை
18. குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
19. கூர்அம்பு ஆயினும் வீரியம் பேசேல்
20. கெடுவது செய்யின் விடுவது கருமம்
21. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
22. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள்
23. கொற்றவன் அறிதல் உற்ற இடத்து உதவி
24. கோள்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.

# மூதுரை

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரால்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
துப்பாமல் சார்வார் தமக்கு

# நல்வழி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ மாநிலத்தீர் - வேண்டா!
நமக்கும் அதுவழியே! நாம் போம் அளவும்
எமக்கென்று இட்டு உண்டு இரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வையகத்தில் வாழ்குவாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட எமது குடும்பத் தலைவி
## திருமதி நந்தினி ஸ்கந்தராஜா வாழ்க்கைச் சரிதம்

ஈழத் தமிழ்நாட்டின் செந்தமிழ் வழங்கும் யாழ்ப்பாணம் தென்மராட்சிப் பகுதியில் இயற்கை வளம் பொருந்திய சாவகச்சேரி நுணாவில் கிழக்கில் பசுபதி பரம்பரையில் சைவ உயர் வேளாள குலத்தில் காலம் சென்றவர்களான உயர்திரு நல்லதம்பி (Agricultural Forman) நாகேஸ்வரி (Teacher) தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரியாக வைகாசி மாதம் 24ஆம் திகதி 1956ம் ஆண்டில் நந்தினி என்னும் நல்லாள் பிறந்தாள். இவர் உடன் பிறந்த சகோதர சகோதரிகளான செல்வகுமார், குசேலினி, கலாஜினி, நந்தகுமாரன், தர்மினி என அறுவரும் குதூகலமாக வலம் வந்தார்.

நந்தினி தனது ஆரம்ப கல்வியை தான் வளர்ந்த சுற்றத்திலுள்ள அமிர்தாம்பிகை பாடசாலையில் கற்றார். தனது இடைநிலை கல்வியை சாவகச்சேரி Driberg Collegeலும் கற்றார். இவர் கல்வியில் காட்டிய ஆர்வத்தை கண்ணுற்ற பெற்றோர்கள் இவரை உயர்கல்வி பெற வட்டுக்கோட்டை Jaffna collegeல் பயில உதவினர். அதனைத் தொடர்ந்து கொக்குவிலில் தொழில் நுட்ப வரைதல் கலையில் புலமை பெற்று – தொழில் நுட்ப வரைதல் பட்டம் பெற்றார். பின்பு நந்தினி தன்னை ஓர் வெளி நிலை மாணவராக இலங்கை பல்கலைக்கழகத்துடன் பதிவு செய்து விஞ்ஞான பட்டதாரி படிப்பை ஆரம்பித்தார். தன் முயற்சியில் முதல் வருட சோதனையில் சித்தியடைந்து G.S.Q தராதர பத்திரத்தை பெற்றுக் கொண்டார்.

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக” என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க நந்தினி தான் பெற்ற கல்வி அறிவைக் கொண்டே அசையாத கடவுள் நம்பிக்கையோடு எளிமையான தூய்மையான வாழ்க்கையை நடத்தினார். பெற்றோர்கள் மகளுக்கு ஒரு வாழ்க்கைத் துணையை அமைத்து விடலாம் என எண்ணி அவர்கள் பசுபதி பரம்பரையிலேயே வழிவந்த உறவினர் ஆன வேலுப்பிள்ளை மற்றும் ராசம்மா தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரன் ஸ்கந்தராஜாவை (Engineer/Technician – Brewarey Guinness) 1980ம் ஆண்டு ஆவணி மாதம் பதிவுத் திருமணம் செய்து வைத்தனர். பின்னர் அதே ஆண்டு ஆவணி மாதம் பிரித்தானியா வந்து 24ம் திகதி முறைப்படி ஒழுக்கமும், கற்பும் வாய்ந்த நந்தினியை ஸ்கந்தராஜா கைப்பிடித்ததனால் இல்லறம் பெருமை பெற்றது. இன்சொல்லும், இன்முகமும், புன்சிரிப்பும் கொண்ட இல்லறத் தலைவி நந்தினியின் சிறந்த மனையறத்தின் நலனாக 1983ம் ஆண்டு அமரர் நந்தினி தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த புதல்வி Sharmilaவை (BSc. Hon - Information Systems & Business Management) பெற்றெடுத்தார்.

தாய்மை அடைந்த பின்பும் கல்வி ஆர்வம் குன்றாத அவர் 1983ல் HND படிப்பை தொடங்கினார். 1986ல் தனது இரண்டாவது புதல்வி Saraவை (Pharmacist –M.Pharm) பெற்றெடுத்தார். அப்போதும் அவர் கணக்காளர் துறையில் ACCA படிக்க ஆரம்பித்தார். கடைசியாக Sayan (Architect – M.Arch Edin/ M.Arch UCL) என்ற ஆண் மகனை 1989ல் பெற்றெடுத்து குடும்பத்தில் குதூகலமாய் வாழ்ந்து வந்தார். தனது மூன்று குழந்தைகளையும் பராமரித்து தனது கல்வி தகமைக்கு ஏற்ப தொழில் வாய்ப்பை அமைப்பது நடைமுறைக்கு ஒவ்வாத நிலையில், தன் குழந்தைகள் முழு நேரப் படிப்பை ஆரம்பித்ததும் Administrator Officer ஆக Government Land Registry ல் தொடங்கி 18 வருடங்கள் கடமை ஆற்றினார்.

1980ம் ஆண்டு தனி ஒருத்தியாக Londonல் தனது காலடியை பதித்த அமரர் நந்தினி சகோதரர் Kuseliniயையும் Tharminiயையும் ஒன்று விட்ட சகோதரன் புகுந்த வீட்டு உறவினர், தன் நண்பர்களையும் London நகருக்கு அழைத்து தனது சொந்த பிள்ளைகள் போல் அம்மா ஸ்தானத்தில் இருந்து பராமரித்தார்.
இவர் மூத்த மகள் Sharmila திருமண வயது எய்தியதும் Thiruchandran Parameswary தம்பதிகளின் புதல்வன் Saththees (BA Accounting & Finance - Accountant) இற்கு மணம் செய்து வைத்து Vithushnan மற்றும் Abimaya என்னும் பேரக்குழந்தைகளை கண்ணாரக் கண்டு முத்தும் வைரமும் போல் காத்து வந்தார்.

குறிப்பாக சாவகச்சேரி Driberg DOSTA College Teamல் Secretary ஆகவும் (செயலாளர்) பின்பு Committee Member (குழு உறுப்பினர்) ஆகவும் பணி புரிந்து வந்தார். ஓய்வு நேரங்களில் அடிக்கடி தனது தாய் நாட்டிற்கு சென்றும், விடு முறைகளை உலகமெங்கும் சுற்றியும் சந்தோசமாக காலம் கழித்து வந்தார். அமரர் நந்தினி எவருக்கும் சுமையாக இருக்காது தனதும், தன் குடும்ப கடமைகளையும் தானே செய்து வந்தார். சொந்த பந்தம் நண்பர்கள் என எல்லோருக்கும் தானே முன் வந்து பல வித உதவிகளை செய்வார். நந்தினி தனது கணவருடன் இணைந்து பலரின் திருமணத்தில் கன்னிகாதானம் செய்துள்ளார்.

விருந்தோம்பலில் மிகவும் ஆர்வம் கொண்ட நந்தினி சொந்தங்களையும் நண்பர்களையும் அன்புடன் இணைத்து ஒவ்வொரு நத்தார் பண்டிகை பிறந்த நாள்களென வருடந்தோறும் தனது வீட்டில் உபசரிப்பார். திருமதி நந்தினி அவர்கள் ஆலயங்களின் திருப்பணிகளுக்கும், விழாக்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் வரையாது நிதி வழங்கி வந்தார். மிகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியுடன் குடும்பம் சமேதராய் Wimbledon பிள்ளையார் கோவிலில் வருடந்தோரும் திருவெண்பாவை பூசை செய்து வந்தார். அத்துடன் Harrow கற்பக விநாயகர் கோவிலில் பூஜைகள் செய்வார். காலம் செல்வதிற்கு சரியாக ஒரு செய்வாய்க்கிழமை முதலும் அவர் விருப்பப்படி விநாயக சதுர்த்தி பூஜைக்கு இடம் இருப்பதாக கோவிலில் இருந்து தொலைபேசியில் கூறியதும் காலம் தவறாது உடனே கோவில் சென்று அபிசேகம் செய்து தனது தர்ம கடமையை ஆற்றினார். ஆண்டவனுக்கும் அவரின் காலம் தெரிந்ததோ என்னவோ!!!

இத்துணை சிறப்பு வாய்ந்த நந்தினி 37 வருடங்களின் பின் தனது இல்லற வாழ்வை முடித்து கொண்டு தனது 61வயதில் June 18ம் திகதி 2017ல் சிறிது ஜுரத்துடன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி இயற்கையின் நியதிப்படி இறைவனடி சேர நேரம் வந்து சொந்தங்கள் அருகில் இருக்க தீர்க்க சுமங்கலியாக 20.06.2017 செவ்வாய்க்கிழமை 18.18ற்கு விஷேட துவாதசி திதியில் அன்னையார் இறைவனின் பாதங்களை பற்றினார்.
நந்தினியின் ஆத்மா சாந்தியடைக!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை – என்னும்
பெருமை யுடைதிவ் வுலகு"

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அன்பு நந்தனிக்கு உன் ஸ்ரீ எழுதும் திறந்த மடல்

நீயும் நானும் மலரும் மணமும் போல் 38 வருடங்கள் ஒன்றிணைந்து ஒருவரை ஒருவர் நன்கறிந்து ஒன்றுபட்டு வாழ்ந்த வாழ்க்கை இறைவனுக்குக் கூடப் பிடிக்கவில்லை போலும், யாருக்கு நான் தீங்கு செய்தேன் இறைவா? என் முல்லை மலரை என்னிடம் இருந்து பறித்து விட்டான்! உன்னை விட்டால் நந்தினியே வேறு யார் என் கையணைக்க? உன் முத்துச்சிரிப்பும் புன்னகையும், நீ அனைவரிடமும் காட்டிய அன்பும் அறனும், உன்னை கடவுள் என்னிடமிருந்து பிரித்தவிதம், எனக்கும் எனது உறவினர்களுக்கும் கொடிய ஒரு இடியாகவுள்ளது.
கண்ணீரிலே நான் காண்கின்றேன், உன் கன்னத்தின் கோலங்கள். என் கண்களில் நீர் சமுத்திரம் போல் ஓடுகின்றது. என் மனைவியின் இழப்பு என் வாழ்க்கையின் தாங்கொணா துயரம். இதை நான் கனவிலும் கூட நினைக்கவில்லை.

காலையில் இன்று நான் எழும்புகையில் உன் பக்கம் பார்த்தேன்
என்னருகில் நீ இல்லை, எப்போதும்போல் என் செய்வேன் என்று
யானறியேன். அழகாக சந்திரன் போல் ஜொலிக்கும்
உன் புன்சிரிப்பை இனி எங்கே காண்பேன்?

இல்லத்தரசியாய் இல்லறம் காத்தாய், வாழ்க்கையில் பல அறம்
செய்து வந்தாய், புரியவைத்தாய் வாழ்க்கையின் அர்த்தம்
சினத்தால் ஒரு விடயமும் வெல்ல முடியாது என்று எனக்கு.
என் மனையின் தலைவியாய் என் பிள்ளைகளின்
அன்புத் தாயாய், அம்மம்மாவாய் வலம் வந்தாய்.

என் பாதை இருளானது நீ போனபின்பு, ஏன் ஒரு சொல்லு
சொல்லவில்லை, மோட்சக் கதவை தட்டுவாயென்று,
என்னிடம் ஒரு சொல்லில்லை துன்பத்தை விமர்சிக்க,
எல்லாம் தொலைந்ததுபோல் ஓர் உணர்வு நீயின்றி, இந்
நாட்கள் உண்மைபோல் உணர முடிகிறதில்லை

வானத்தில் நீ எந்த நட்சத்திரம் என ஏங்குகின்றேன்
உனக்கு மட்டும்தான் அந்த விடை தெரியும், ஏனெனில்
உனக்கு மட்டும்தான் போன காரணம் தெரியும்

நாம் பல விடயம் பேசவில்லை குறுகிய நேரத்தில் நீ சென்றதனால்
என் மனம் கூறுகின்றது பிரிவால் நீயும் சோகமேயென்று
காலன் வந்து அவசரமாய் மோட்சத்தில் சேர்த்துவிட்டான்,
ஆனால் நீ இன்னும் என்னுடன் இருப்பதை உணருகிறேன் நான்

உன் ஆறுதல் குரல் இன்னும் கேட்கிறது ஆனால் அருகில் நீ
இன்றில்லை, உன் எதிரொலி மட்டும் என்னை தொடர்கிறது,
கோடைகாலம் குறைந்ததுபோல் காண்கின்றேன், இரவுகள்
ஒரு யுகமாகத் தெரிகிறது, கனவுகள் காண்பதே அரிது
நான் தூக்கமின்றி தவிக்கின்றேன் கலங்குகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நத்தார், பிறந்தநாள் விசேட நாட்களில் இனிமேல் என்
செய்வேன், எளிதாக அந்நாட்களை எனக்கு நீ காட்டினாயே
திரும்ப நீ வந்திடு என்பது சுயநலமே, என் வருத்தம் என்னவெனில்
உன் கடைசி நோவை மாற்றவில்லையென்பதே.

உனது அன்பு மட்டும் போதுமென்றிருந்தேன் எப்போதும் நீ
அருகிலிருக்க, இப்போது தான் உணருகிறேன் நீ திரும்ப
வரப்போவதில்லையென்று, பலர் சொல்வார் காலத்தில் துன்பம்
பறந்துவிடுமென்று, அவர்கள் உண்மையை அறிவாரில்லை
எப்போதும்போல் இல்லையென்று.

நேரத்திற்கும் காலத்திற்கும் ஒரு விளக்கமில்லை இப்போ,
வாழ்க்கை வெறும்கோது என்றாகிவிட்டது.
மன்னித்துவிடு என்னை, உன் மனதை வருத்தியிருந்தால்,
உன்னுடன் வாழ்ந்த வாழ்க்கையை சிந்தித்து
என் காலத்தை போக்குவேன் எமது பிள்ளைகளுடன் என் அன்பே.

உனது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உனது அன்பான கணவன்
ஸ்ரீ

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Dear Mum,

We are the luckiest people in the world to have a mum like you. Our family was a safe, loving place full of laughter, fun and adventure. As my teacher of motherhood, you were well placed to inspire me to want to learn, explore and grow and was always encouraging and supporting. I will always keep your words of wisdom at heart especially your key advice for motherhood about how children need to be nurtured correctly from the beginning so that they will be set for life; I hope to bring up Vithushnan and Maya as you have helped to do so thus far and replicate your work. You always put us kids first – you were so incredibly nurturing and selfless.

When I had my own babies, you were my support – cleaning my house and filling my fridge with meals for my family so that I could go back to work and build on my career. You were a wonderful and loving grandmother to my kids; singing sweet songs with Maya round and round in the sunshine as she bounced up and down and playing football with Vithushnan.

You also took Saththees in as he was your own son. Caring for and looking after him as his parents were far away and that's what he loves about you.

We miss your smile, we miss your voice and most of all we miss your love. We love you mum always and forever.

Lots of love
**- Sharmila & Saththees**
(Daughter & Son-In-Law)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mummy,**

I'll miss watching you brush your long black hair as you sit in that same spot on your bed.

I'll miss you feeding me rice and curry on a Friday afternoon as I come home tired from work.

I'll miss you calling my name from the bottom of the stairs, sarraaaaaaaa, saying that food is ready.

I'll miss the constant arguments that we would have, mostly my fault from
total stubbornness.

I'll miss your soft cheeks and your perfect eyebrows.

I'll miss that sarcastic thumbs up you do with that cheeky grin on your face when your angry but don't want to show it.

Most of all mum, I'll miss you. Your love and dedication towards your family, no matter how we treat you, always shines through. I hope one day I can be just as loving and giving to my own family.

I am truly sad that you are not with me anymore, there is so many more things that you needed to teach me. Like, I still need to know your walttaluppam recipe and how do I make your famous mooruku?

Mummy you were a top class lady loved by all, famous in the kitchen and a loveable woman. You will be missed.
My only comfort is that you can finally be at rest, you can relax and smile down at us with that gorgeous beautiful big smile that everyone loves.

Mummy I am sorry for any wrongs I have done, I will always love you, you have a special spot in my heart.

Love you forever
**- Sara**
(Daughter)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Mum,**

You showed me what it was to put the people you love before yourself and what it was to care for others.

You showed me how to think for myself and to trust my intuition and instinct.

You showed me the courage to not be shy or intimidated at times where I didn't feel I belonged.

You showed me that success was nothing without happiness, and life fulfilment meant more than money or rank.

You showed me the meaning of making sacrifices, and the importance of being selfless.

You showed me how to be tolerant, to accept people for who they are and the significance of being forgiving.

You showed me how trivial it was to argue, and that fighting solved nothing.

You showed me how to smile and the importance of love and kindness.

You showed me the sound of laughter and the joy of trying to make others laugh, no matter how good the joke.

You showed me what family meant and how it was most important of all.

You showed me how to be a friend, an uncle, a cousin, a brother.

You showed me how to be your son, something I will treasure and cherish for the rest of my life.


- **Sayan**

***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Family Tree of Late Mrs Nan




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# e Mrs Nanthini Skandarajah




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதிப்பிற்குரிய மாமிக்கு என் மனமார்ந்த சமர்ப்பணம்

உறவுமுறையில்… நான் அழைத்தது மட்டும் தான் 'மாமி'
நிதர்சனத்தில…! நீங்கள் ஒரு தாய் எனக்கும், என் மனைவிக்கும்.
உங்கள் பேரகுழந்தைகளை பேணிக்காத்து போற்றி வளர்த்தீரே இனி யார் வருவார் அவர்களை அரவணைப்பதற்கு?
எம் அனைவரையும் தவிக்கவிட்டு இறைவனிடம் சென்றீரே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

உங்கள் அன்பின் மருமகன்
- *சத்தீஸ்*

***

We love you ammama,
we miss you ammama!

always and forever

vithashnan + Abimaya
XOX

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது குடும்பத்தில் மூத்த சகோதரியாய் நீர் அவதரித்து
உமது நாமத்தை அக்கா என உச்சரித்து
அன்பையும் அறிவையும் உணவையும் உபசரித்தாயே என் செல்வமே
நீர் ஏன் எமைவிட்டு வெகுதூரம் சென்றீரோ! ஐயகோ
கடந்த ஆண்டில் வா வா என்று நாம் பிறந்த
மண்ணுக்கு சாவகச்சேரிக்கு அழைத்தீரே!
கோவிலுக்குச் சென்று உம்முடன் தரிசனம் கண்டேனே.
கடைசியில் நீர் எனக்கு யூன் 6ல் தொலைபேசி எனக்கெடுத்து
உம் அன்பை பகிர்ந்தீரே!
யார் எனக்கு இனி எடுத்து உம் அன்பை பகிர்வாரோ!

உம் பிரிவால் வாடி நிற்கும் அன்பு சகோதரன்.
உன் ஆத்மா சாந்தியடைய இறைவன் அடி வேண்டுகிறேன்.

- *செல்வா* Holland

***

குடும்பத்தின் குல விளக்காய் பாசத்தின் உறைவிடமாய்
ஆறு ஒருவரில் மூத்த சகோதரியாய் மங்கலமாய் வலம் வந்து
அக்கா என்ற நாமத்துடன் எனக்கு கிடைத்த அரும் தவமே!
எனி நாம் எப் பிறப்பில் ஒரு தாயின் வயிற்றில் பிறப்போமோ
ஏன் என்னை பிரிந்து போக இவ்வளவு அவசரமோ!
அம்மா அப்பா இடத்திலிருந்து என்னை வழிநடத்தி
தேவதையாய் வலம் வந்த என் அக்கா குரல் ஒலியையும்
சிரிப் பொலியையும் எந்த ஜென்மத்தில் காண்பேன் எனி?
ஏன் இந்த அவசரமோ காலன் அவன் பாச கயிற்றுக்கு நான் அறியேன்
என்னை தேடி அழைப்பதற்கும் அக்கா எனச் சொல்வதற்கும்
உங்கள் ஆசை முகம் எனக்கு இல்லையே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
என்றென்றும் இறைவனை வேண்டி நிற்பேன்

உன் பிரிவால் உதிர்ந்து நிற்கும்
- அன்பு சகோதரி *கலா* Canada



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் அக்கா,

எங்கு விட்டு சென்றாய் ஏன் இவ்வளவு அவசரம். எல்லோருக்கும் மூத்தவளாய் பிறந்து எனக்கு ஒரு அக்கா என்று மட்டும் இல்லாமல் தாயாகவும் இருந்தாய் எனக்கு. பல கடமைகளை அப்பா அம்மா ஸ்தானத்திலிருந்து கன்னிகா தானமும் செய்து கனடாவுக்கு வழி அனுப்பினீர். இனி யார் எனக்கு அறிவுரைகள் கூறி சுகம் கேட்பார். அடிக்கடி எனது உடம்பை கவனிக்கச் சொல்லி விட்டு உங்களை கவனிக்காமல் போய்விட்டீர்களே அக்கா. இது நிஜமா என இன்னமும் தான் நம்ப முடியவில்லை. ஒரு நாள் ஆவது உங்களுடன் எதிர்த்து பேசியதோ சண்டை போட்டதோ இல்லை. அது போல் தான் நீங்களும் என்னை வழி நடத்தி சென்றீர்கள். ஒரு போதும் மனம் கோணாத என் அக்கா பாசம் முகம் என்று தான் காண்பேனோ.

உமது அழகு முகத்தையும் புன்சிரிப்பினையும் எப்ப தான் காண்பேனோ. பேரப்பிள்ளைகளைப் பற்றி கதைக்கும் போது உம் உதடுகளில் வரும் பொன்சிரிப்பை பலமுறை நான் ரசித்து இருப்பேன். காலன் அவன் பிடிகயிற்றுக்கு ஏன் வெகுவிரைவில் ஆசை கொண்டீர்களோ நான் அறியேன். ஆண்டுகள் பல கடந்தாலும் உன் அன்பு மாறுமோ என் அக்கா. நீர் எனக்கு பாசமிகு வழிகாட்டி. ஆயிரம் உறவுமுறை இருந்தாலும் அக்கா என்று ஒரு உறவு இனி வருமோ என் வாழ்வில். நாம் பிறந்த மணிணிற்கு நீர் சென்று வரும் போதெல்லாம் என்னையும் நினைத்து சேலை பல வாங்கி வந்து அதிலும் நீர் விரும்பியதை எடும் என எனக்கு முதல் தெரிவு அளித்து மகிழ்வீரே. இவை எல்லாம் யார் உறவில் நான் பெறுவேனா. நீர் இல்லாத இவ் இடத்தில் எப்படித்தான் இந்த வீட்டில் நான் வருவது என நினைக்கவே முடியவில்லை. உன் பிரிவை நிஜம் என்று நம்ப முடியவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

அன்பின்
சகோதரி *குசே*
கனடா

***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது ஆசை அக்கா

அகத்திலும் முகத்திலும் அழகான என் ஆசை அக்கா, எனக்கு நண்பராகவும் அன்னை ஸ்தானத்திலும் அன்பாக இருந்தார். ஒருபோதிலும், எந்தவொரு விடயத்திலும் வாக்குவாதமோ முரண்பட்டதுமோ இல்லை.

சகோதர பாசத்தை ஊட்டி வளர்த்தவர்கள் எம் பெற்றோர்கள், அதற்கு உரம் போட்டவர் எனது ஆசை அக்கா. அக்கா இல்லாமல் தம்பி இல்லை, தம்பி இல்லாமல் அக்கா இல்லை என வளர்ந்தவர்கள் நாங்கள்.

அக்கா திருமணமாகி லண்டன் வந்தபின், அவர் ஒவ்வொருவராக சகோதரர்களான என்னையும் மற்றும் குஸே, தர்மனியையும், லண்டனில் அம்மாவின் இடத்திலிருந்து மிகவும் கவனமான காத்து வந்தார். நான் அக்காவின் வீட்டில் வசித்து வந்த போது, எனக்கு மறக்கமுடியாத நாளென்றால் அது trip to Alton Towers with lots of fun and food.

இப்படி ஒரு கடின முயற்சியும் உழைப்பும் கொண்ட அன்பான அக்காவை அடைய வாய்ப்பு கிடைத்தது என்றால் அது இறைவனின் ஆசீர்வாதமேயாகும். என் வாழ்க்கையின் இன்ப துன்பத்தில் என்றும் உறுதுணையாய் இருந்து புத்திமதி கூறி, என் குடும்பம் உயர்வடைய ஊன்றுகோலாய் இருந்தார்.

தனது வாழ்க்கையைத் தியாகம் செய்து, உடலையும் உருக்கி அடுத்தவர்களுக்காக வாழ்ந்த தெய்வம் இப்போ எம்மைப் பிரிந்தது, எம்மை துன்பத்தில் மிதக்கச் செய்தாலும், நான் அதை துன்பமாக உணராமல் என் மனதை தைரியமாக வைத்துக் கொள்ள, அக்காவின் மேன்மையான குணங்களும் உதவிகளும் கொண்ட வாழ்க்கையை நினைவில் நிறுத்தி, அவரின் அன்பு வழியில், எமது வாழ்க்கையைக் கொண்டு செல்வதை விரும்புகிறேன்.மனையின் ஒளி இன்று மங்கியது, ஆனால் ஆசை அக்காவின் ஒளி மங்காது.

"Acca knew me better than anyone else,
supported and loved me more,
praised me, raised me kindly,
she was my heroic preacher.

Acca was my positive vibe,
childhood life was colourful when you were by our side,
you were my soul mate and a good buddy
always making others happy with wide smile.

Acca you were a gift from Good
your voice was sweet
Imagining a life without you will be
an ocean of tears."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டனத்தார் கூற்று:

அப்பன் எத்தனை அப்பனோ
அன்னை எத்தனை அன்னையோ
முன்னம் எத்தனை ஜென்மமோ
இன்னும் எத்தனை ஜென்மமோ.

